# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 69
ஆகஸ்ட் 2014

தொகுப்பு: Dr. B. வில்லியம் தர்ம ராஜா

அப்போஸ்தலர்

3451 கர்த்தரை முன்னிட்டு தைரியமுள்ளவனாய் போதகம் பண்ணு (14:3)
3452 ஓடிப்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணு (14:6,7)
3453 பிரசங்கத்தைக் கேட்கிறவர்களை உற்றுப்பார் (14:9)
3454 உனக்கு மீறிய மரியாதையைப் பெறுவதை ஏற்றுக்கொள்ளாதே (14:15)
3455 வீணான தேவர்களை விட்டு, ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று பிரசங்கி (14:15)
3456 சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணி, அநேகரைச் சீஷராக்கு (14:21)
3457 சீஷருடைய மனதைத் திடப்படுத்து (14:22)
3458 சீஷர்கள் விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்கும் புத்தி சொல்லு (14:22)
3459 வசனத்தை உபதேசித்துப் பிரசங்கி (14:25, 15:35, 16:32, 18:11)
3460 தேவன் உன்னைக் கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவி (15:4)
3461 புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது (15:19)
3462 விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கு விலகியிரு (15:20,28,21:25)
3463 வேசித்தனத்திற்கு விலகியிரு (15:20, 28, 21:25)
3464 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காக உன் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவனாயிரு (15:25)
3465 சகோதரருக்குப் புத்தி சொல்லி அவர்களைத் திடப்படுத்து (15:32)
3466 தேவனைத் துதித்துப்பாடு (16:25)
3467 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள. (16:31)
3468 வேதவாக்கியங்களின நியாயங்களை எடுத்து சம்பாஷி (17:2)
3469 மனோ வாஞ்சையாய் வசனத்தை எற்றுக்கொள் (17:11)
3470 தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார் (17:11)
3471 இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் பிரசங்கி (17:18)
3472 மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கி (17:30)
3473 "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனே கூட இருக்கிறேன்" (18:9,10)
3474 பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள் (19:2)
3475 மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் (19:4), கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே பெற்றுக்கொள் (19:5)
3476 தைரியமாய்ப் பிரசங்கி (19:8)
3477 தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து புத்தி சொல்லு (19:8)



3478 வெகு மனத்தாழ்மையோடு கர்த்தரைச் சேவி (20:19)
3479 தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் சாட்சியாக அறிவி (20:21)
3480 ஒன்றையும் குறித்து கவலைப்படாதே (20:24)
3481 உன் பிராணனை அருமையாக எண்ணாதே (20:24)
3482 உன் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடி (20:24)
3483 தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணு (20:24)
3484 இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்று (20:24)
3485 தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணு (20:25)
3486 தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காதே (20:26)
3487 உன்னைக் குறித்தும் தேவன் சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிரு (20:28)
3488 ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் இச்சியாதே (20:33)
3489 பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கு (20:35)
3490 வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்பதை எல்லா விதத்திலேயும் காண்பி (20:35)
3491 முழங்காற் படியிட்டு ஜெபம் பண்ணு (20:36)
3492 கண்டவைகளையும், கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக தேவனுக்குச் சாட்சியாயிரு (22:15)
3493 எல்லா விஷயங்களிலும் நல்மனசசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நட (23:1)
3494 உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக (23:5)
3495 தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படு (24:16); ஆயினும் கொடிய குற்றங்களை உன்மேல் சாட்டலாம் (25:8)
3496 "நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" (26:14)
3497 தேவனைப் பற்றும் விசுவாசத்தோடிரு (26:18)
3498 பாவமன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக ஜனங்களிடம் ஊழியஞ் செய் (26:18)
3499 ஜனங்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கு திரும்பும்படி ஊழியஞ்செய் (26:18)
3500 ஜனங்கள் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்குத் திரும்பும்படிக்கு, நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு ஊழியஞ் செய் (26:18)

## இளைப்பாறுதலில் பரமனோடு

22.7.2014 அன்று சகோதரி. சாராள் நவரோஜி அவர்கள் தன்னுடைய ஊழிய ஓட்டத்தை முடித்து மகிமையில் பிரவேசித்தார்கள். அவர்கள் விட்டுச்சென்ற சபைக்காக, ஜெபியுங்கள். அழைத்தீரே இயேசுவே, நிகரே இல்லாத சர்வேசா போன்ற அநேக பாடல்களை எழுதியவர் இவர்கள்.

# Listen, Don't Talk

**Dr. P. Selvaraj, Pollachi**

Be Quick To Listen And Slow To Speak (JS1:19)

1. Become Wiser (Prov.1:5)
2. Listen to your parent's advice (Prov1:8)
3. Pay attention to what your parents say (Prov.4:1)
4. Seek wisdom (Prov.8:1)
5. Don't ignore instruction (Prov.8:33)
6. Remembar, the wise listen to others (Prov.12:15)
7. Accept parent's discipline (Prov.13:1)
8. Listen to constructive criticism (Prov.15:31)
9. Grow in your understanding (Prov.15:32)
10. Listen and prosper (Prov.16:20)
11. Apply your heart to instruction (Prov.22:17)
12. Listen carefully to words of knowledge (Prov.23:12)
13. Listen and be wise (Prov.23:19)
14. Listen to your father (Prov.23:22)
15. Listen to your teachers (Prov.5:13)
16. Quick advices block the flow of communication (Prov 18:13)

# The Names of Jesus!

"…..who do you say I am"(matthew16:15)

The Bible is filled with names. God has a message in them

1. Jesus: Derived from the Hebrew "Joshua" (y 'shua) or "Je-Hoshua" Meaning Jehovah is salvation, "saviour",or the "one who saves". "….Joseph named him Jesus" (matthew1:25)
2. Kurios : This Name is found over 600 times in the NT and it means "Jesus is Lord" "We have seen the Lord!(John.20:25)
3. Despotes : It's another greek term translated to "Lord" and it appears in Luke2:29,Acts4:24,2Peter2:1;Jude4;and revelation6:10
4. Theos : Equivalent to the Hebrew Elohim This term appears more than a 1,000 times in the NT
5. "I AM" : Jesus upset His generation especially when he said" Before Abraham was, I AM" (John 8:58, Exodus 3:14)
6. Logos: "The word of God " (John1:1-2; Revalation19:13)
7. Theotes: "Godhead" (Colossians2:9, Romans1:20)
8. Hupsistos: "Highest" (Matthew21:9)
9. Soter: "Saviour" (Luke1:4-7)
10. Sophia: "The wisdom of God" (I Corinthians 1:2)
11. Alpha and Omega: The Beginning and the End(Revelation1:8)
12. Ixious: "Fish" The secret word for Christ. (Because of persecution of Christians. They refused to address Caesar as "Lord". As a result they were martyred.



# புதிய மனுஷன்

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். ஒவ்வொரு மாதமும் விசுவாசவாழ்வு அறிக்கையின் அடிப்படையில் தேவ ஒத்தாசையோடு அநேக களைந்து போட வேண்டிய, தரித்துக்கொள்ள வேண்டிய குணாதிசயங்களை அனுபவமாக்க உதவி செய்யும் இரட்சகர் இயேசுகிறிஸ்துவுக்கே ஸ்தோத்திரம், நமது விசுவாச வாழ்வில் தேவையான மெய்யான நீதியையும் பரிசுத்ததத்தையும் தரித்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்(எபேசி 4:24). புதிய மனுஷன் நீதியை தரித்துக் கொண்டவன் நீதிமானாய் நடந்து கொள்பவன். பரிசுத்தத்தை தரித்துக் கொள்பவன்.

## நீதியைத் தரித்துக்கொள்ளுங்கள்

கர்த்தர் நீதியுள்ளவர்,நீதியின் மேல் பிரியப்படுவார் (சங்11:7) யோபு தனக்குண்டான எல்லாவற்றையும் இழந்து சரீர சுகத்தையும் இழ்ந்து நிற்கின்ற சூழ்நிலையிலும் சொல்லுகிறர். நீதியைத் தரித்துக்கொண்டேன் : அது என் உடுப்பாயிருந்தது (யோபு 29:14) தேவன் பேசும்போது அவருடைய நீதி உன்னதமானது(சங். 71:19) அவர் நீதி என்றென்றும் நிலைநிற்கும் (சங் 111:3).உங்கள் வாழ்க்கையின் எல்லாக் காரியங்களிலும் நீதியாய் நடந்து கொள்ளுங்கள். உங்கள் மீது தேவனுடைய ஆசீர்வாதங்கள் வந்து இறங்கும். நீதியின் பாதையில் ஜீவன் உண்டு அந்தப் பாதையில் மரணம் இல்லை (நீதி 12:28) எக்காலத்திலும் நீதி செய்வோர் பாக்கியவான்கள் (சங் 106:3) நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம் (ஏசா 32:17) துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில் அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான் (எசே. 18:27) இயேசு மலைப்பிரசங்கத்திலே கூடிவந்த நீதியின் மேல் பசி, தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்(மத். 5:6) நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியன்வான்கள்(மத் 5:10)முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் (மத் 6:33) நீங்கள் தேவனுடைய ஆவியில் நிரப்பப்பட்டவர்களாய் கனி கொடுக்கும் ஜீவியமுள்ளவர்களாயிருந்தால் உங்கள் வாழ்வில் ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் (எபேசி 5:9).

## நீதிமான்களாய் நடந்து கொள்ளுங்கள்

வேதத்தில் முதன் முதலாய் நீதிமான் என்று அழைக்கப்பட்டவர், கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்த நோவா. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். ஆகையால் அவனுக்குக் கிடைத்த உன்னதமான ஆசீர்வாதம் தேவனாடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என்பதே (ஆதி 6:8,9) தேவன் நோவாவைக்குறித்து கொடுத்த சாட்சி.இந்தச் சந்ததியில் உன்னை எனத்து முன்பாக நீதிமானாகக் கண்டேன் (ஆதி 7:1) "I Have seen you to be righteous" சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாயிருந்தது.ஆபிரகாம் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்.அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து துன்மார்க்கரோடு நீதிமானையும் அழிப்பீரோ? நீதிமான்கள் நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ? (ஆதி 18:20-24) என திறப்பின் வாயிலில் நின்று சோதோம் கொமோரா

பட்டண ஜனங்களுக்காக தேவனிடம் பரிந்து பேசுகிறான் அநீதி நிறைந்த உலகத்தில் தேவகிருபையினால் மாத்திரமே நீதியாய் வாழமுடியும் .இந்த மாதம் முழுவதும் நமக்கு ஜெபமாதமாக பிரத்தியேகப் படுத்தப்பட்டிருக்கிறது .நீங்கள் நீதிமான்களாய் நடந்து கொள்ளும்போது மாத்திரமே மற்றவர்களுக்காய் முழங்கால்களை முடக்கி தேவனுக்கு சமீபமாய்ச் சேர்ந்து அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காகக் கண்ணீர் சிந்தி, ஜெபிக்க முடியும். உங்கள் வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும், எல்லைகளிலும் நீதியும்,உண்மையும் பரிசுத்தமும் காணப்படவேண்டும்.

## பரிசுத்தத்தை தரித்துக் கொள்ளுங்கள்

தேவன் ஏழாம்நாளை ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார்(ஆதி 2:3). முதற் பேரா அனைத்தையும் பரிசுத்தப்படுத்தும்படி கட்டளையிட்டார் (யாத் 13:2). ஆரோனும் அவன் வஸ்திரங்களுமஅவனுடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாயிருக்கும் படிக்கு கட்டளை கொடுத்தார். உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் (யாத் 31:13) என்றார். அவரைத் தொழுது கொள்ளும்போது பரிசுத்த அலங்காரத்துடன் தொழுதுகொள்ள வேதம் கற்றுக் கொடுக்கிறது(சங் 29:2) தேவ ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் (1கொரி 3:17) நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது அந்தப்படி நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்கு உட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தை பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுகொள்ளுவனாக, கடைசி நாட்களில் மனுஷர்கள் பரிசுத்தமில்லாதவர்களாயும் சுபாவ அன்பில்லாதவர்களையும் இச்சையடக்க மில்லாதவர்களையும் தேவபிரியராயிராமல் சுகபோகப் பிரியர்களாயுமிருப்பார்கள்(11 தீமோ 3:1) யாவரோடும் சமாதானமாயிருக்வும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே(எபி 12:14) உங்கள் வாழ்க்கையின் முழுப்பகுதியும் இன்னும் தேவனுடைய கரத்தில் பரிசுத்தமாக்கப்படும்படி ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதா? உங்களுக்கென்று இன்னும் எதையும் மறைத்து வைத்திருக்கிறீரோ? உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள் இருமனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்(யாக் 4:8) தானியேல் தன்னைத் தீட்டுபடுத்தக்கூடாது என தீர்மானமுள்ளவனாயிருந்தபடியால் அவனுடைய காரியம் எல்லாம் ஜெயமாயிருந்தது. அவன் ஜெபவீரனாக தேவனுக்குப் பிரியமானவனாக வாழ்ந்து காட்டினான். பரிசுத்த ஆவியினால் நிறைந்து தேவசமூகத்தில் எப்பொழுதும் ஜெபிக்கிற ஜெபவீரர்களாக ,வீராங்னைகளாக மாறுங்கள் .தேவனுடைய பரிசுத்தம் உங்களில் காணப்பட அவருடைய சமூகத்தில் காத்திருங்கள். பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு,பரிசுத்தமாகுதலைத் தெய்வ பயத்தோடே பூரணப்படுத்துக்கடவோம்(11கொரி 7:11) எனது விசுவாச வாழ்வு அறிக்கை மெய்யான நீதியையும் பரிசுத்தத்தையும் தரித்துக்கொள்ளுகிறேன்.

---

## இளைப்பாறுதலில் பரமனோடு

22.7.2014 அன்று சகோ. பிரகாஷ் ஏசுவடியான் அவர்கள் தன்னுடைய ஊழிய ஓட்டத்தை முடித்து மகிமையில் பிரவேசித்தார்கள். அவர்கள் விட்டுச்சென்ற ஊழியம், குடும்பத்திற்காக, மனைவிக்காக ஜெபியுங்கள். எனக்காய் ஜீவன் விட்டவரே போன்ற அநேக பாடல்களை எழுதியவர் இவர்கள்.



# பின்மாரிக்காலத்து மழை

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

இது தேவன் நம்மை நோக்கி ஜெபிக்க அழைக்கும் அறைகூவலே! ஜெபிக்க வேண்டியது நமது கடமை மாத்திரமல்ல (Duty) அது நம்முடைய பொறுப்பும் (Responsibility) ஆகும். கர்த்தர் சொல்லுகிறார் “என்னை நோக்கிக் கூப்பிடு” (எரேமியா 33:3) என்பதாக. இது ஜெபிக்க தேவனிடத்திலிருந்து பிறக்கும் கட்டளை. கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஜெபிக்கிற மனுஷன். ஐக்கியம் -சபை-தேசம் தேவனுடைய ஆசீர்வாதத்தை நிச்சயம் பெறும். அதை எரேமியா 33:3 பின்பகுதியில் கர்த்தர் சொலலுகிறார். நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். என்பதே ஜெபிக்கிற மனுஷனுக்கு தேவன் தரும் ஆசீர்வாதம்! தேவன் சொன்னபடியே பின்மாரிக்காலத்து மழைக்காக ஜெபிக்கும் போது கர்த்தர் தாம் சொன்னபடியே மின்னல்களை உண்டாக்குவார்: வயல்வெளியில் (ஊழியத்தில், வாழ்வில், தேசத்தில்) அவரவருக்கு (ஜெபிக்கிற ஒவ்வொருவருக்கும்) பயிர் உண்டாக (பலன்களும் , ஆசீர்வாதங்களும்) அவர்களுக்கு (ஜெபிக்கிறவர்களுக்கு) மழையை (எழுப்புதல்) கட்டளையிடுவார் என்பது நிச்சயம்.

தேவன் ஆதி அப்போஸ்தலர்களின் காலத்தில் அனுப்பிய ஆவியானவரின் அளவற்ற அசைவாடுதல் எழுப்புதல் முன்மாரி மழை. இப்போது தேவன் அனுப்ப விரும்புவதோ பின்மாரி மழை! முந்தின மகிமையிலும் பிந்தின மகிமை பெரிதாயிருக்க வேண்டும் என்பது தேவ திட்டம். முந்தின ரசத்தின் ருசியிலும் பிந்தின ரசத்தின் ருசி மிகுந்ததும் நல்லதுமாயிருக்க வேண்டும் என்பது தேவசித்தம். வாசித்துபாருங்கள் ஆகாய் 2:9. முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறாா. தேவன் இந்தப் பின் மாரிக்காலமான நம்முடையக் காலத்தில் நம் கண்கள் காண செய்யப்போவது முன்மாரிக்காலமான அப்போஸ்தலர்கள் காலத்தில் செய்வதை விட மிகுந்த மகிமையுள்ளதாயிருக்கும்.

ஆதி அப்போஸ்தலர் நாட்களில் தேவன் செய்தவைகளை அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் வாசித்துப் பாருங்கள். அது நம்மை மெய்சிலிர்க்க வைக்கலாம். ஆனால் தேவன் நம்முடைய ஜெபம் கேட்டு இந்நாட்களில் செய்யப்போவது ஆதி அப்போஸ்தலர்களை மெய்சிலிர்க்க வைக்கும்! காரணம் அவாகள் கண்டவைகளிலும் மேலானவைகளையே பெரிய எழுப்புதல்களையே நாம் காணப் போகிறோம் என்பது உறுதி. அவர்கள் கண்ட எழுப்புதல்களுக்குக் காரணம். அவர்கள் ஜெபமே. நாம் காணப் போகிற எழுப்புதலுக்கும் காரணம் நம்முடைய ஜெபமாகத்தான் இருக்க முடியும். நம்முடைய ஜெபமே நம்முடைய தேசத்தை அசைக்கும்.! எழுப்புதலைக் கொண்டு வரும்!ஆதி அப்போஸ்தலர் நாட்களில் ஆதி அப்போஸ்தலர்கள் எப்படி ஜெபித்தார்கள் என்று பாருங்கள்.

ஆதி அப்போஸ்தலர்கள் ஆதி அப்போஸ்தல சபை விசுவாசிகள் ஜெபித்த விதத்தை வேதம் தெளிவாய் அழகாய் விளக்குகிறது . தியானித்து அனுபவமாக்குங்கள்.

1. ஜெபம் பண்ணுவதில் **உறுதியாய்த்** தரித்திருந்தார்கள் அப். 2:42
2. **ஜெப வேளை என ஒன்றைக் குறித்து** ஜெபித்தார்கள். அப். 3:1
3. **ஒருமனப்பட்டு** ஜெபித்தார்கள் அப். 4:24
4. ஜெபம்பண்ணுவதில் **இடைவிடாமல்** தரித்திருந்தார்கள். அப். 6:4

5. **பரிசுத்த ஆவியினாலே நிறைந்து** ஜெபித்தார்கள். அப். 7:55,60
6. **எப்பொழுதும்** தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். அப். 10:22
7. தான் **(தனித்து)** ஜெபம் பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான். அப். 10:9, 9:11
8. சபையார் (பேதுருவுக்காக)அவனுக்காகத் தேவனை நோக்கி **ஊக்கத்தோடே** ஜெபம் பண்ணினார்கள். அப். 12:5
9. கர்த்தருக்கு **ஆராதனை செய்து உபவாசித்து** ஜெபம் பண்ணினார்கள். அப். 13:2,3
10. **வழக்கமாய்** ஜெபம் பண்ணுகிற இடத்தில் அப். 16:13
11. **நடுராத்திரியில்** பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்து. அப். 16:25
12. அவர்கள் **எல்லாரோடுங்கூட** (குழுவாய்)ஜெபம் பண்ணினான். அப். 20:36

அப்போஸ்தலர்களின் ஜெபம் உறுதியான ஜெபமாய் ஒரு மனப்பட்ட ஜெபமாய், இடைவிடாத ஜெபமாய், பரிசுத்த ஆவியிலே நிறைந்த ஜெபமாய், எப்பொழுதும் (எப்போதாவது ஜெபிக்கிற அனுபவம் அல்ல) ஜெபிக்கும் அனுபவத்தோடு தனித்தும் ஊக்கத்தோடும் ஆராதித்தும் உபவாசித்தும் நடுராத்திரியிலும் குழுவாகவும் ஐக்கிய மாகவும் ஜெபிக்கும் இந்த ஜெப அனுபவத்தைத் தங்கள் வாழவில் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதைத்தான்மேலே உள்ள 12 குறிப்புகளும் நமக்கு காட்டுகின்றனர்.

அது மாத்திரமல்ல இயேசுவின் ஜெபத்தொடு அவர்கள் ஜெபம் ஒத்திருக்கிறதை நீங்கள் காணலாம்.இயேசுவின் ஜெப அனுபவத்தைப் பாருங்கள்.

1. **அதிகாலையில்** இருட்டோடே (மாற்.1:35) ஜெபித்தார். அப். 2:15
2. **மாலையில்** (மாற்.6:46,47) ஜெபித்தார்.
3. **இரா முழுவதும்** (லூக்.6:12) ஜெபித்தார். அப். 16:25
4. **உபாவாசித்து** (மத்.4:2) ஜெபித்தார் அப். 13:2,3
5. **பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்** (எபி.5:7) ஜெபித்தார். அப். 12:5
6. **ஸ்தோத்திரத்தோடும் விசுவாசத்தோடும்** (யோவா.11:41,42) ஜெபித்தார். அப். 13:2,3
7. **தனித்து** (லூக்.5:17)ஜெபித்தார் அப். 10:9,9:11
8. **குழுவாய்** (மத்.17:1)ஜெபித்தார் அப். 20:36

அப்போஸ்தலர் நடபடிகளில் இருந்து மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள வசனங்களால் இயேசுவின் ஜெப அனுபவத்தோடு ஆதி அப்போஸ்தலர்கள் ஆதி அப்போஸ்தலத் திருச்சபை விசுவாசிகளின் ஜெப அனுபவம் ஒன்று போல் இசைந்து போவதைக் காண முடிகிறதல்லவா. நம்முடைய ஜெபஅனுபவம் இயேசுவின் ஜெப அனுபவத்தோடும் ஆதி அப்போஸ்தலர்களின் ஜெப அனுபவத்தோடும் இசைந்து போகிறதா சிந்தித்து செயல்படுங்கள். கீழ்ப்படிந்து சீர்படுத்தங்கள். அப்போது உங்கள் ஜெப அனுபவம். ஜெய அனுபவமாக மாறும்.

**ஜெபிக்கிற மனுஷன் வீண் அலுவல்காரனாயிருக்கமாட்டான்.**
**ஜெபிக்கிற மனுஷன் ஒழுங்கற்று நடக்கமாட்டான்**

ஜெபிக்கிற மனுஷன் வாழ்வில் ஒழுங்கு இருக்கும். ஆதி அப்போஸ்தலர்களின் அனுதின ஒழுங்கைப் பாருங்கள்.

**1. தினம் தினம் ஒரு மனம்**

ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே **அனுதினமும்** தரித்திருந்தார்கள். அப். 2:46



**2. தினம் தினம் சபை வளர்ச்சி**

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் **அனுதினமும்** சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார். அப். 2:47

**3. தினம்தினம் ஊழியம்**

**தினந்தோறும்** தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்து வென்று பிரசங்கித்தாா்கள். அப். 5:42

**4. தினம் தினம் சபைகளின் பெருக்கம்**

சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு **நாளுக்கு நாள்** பெருகின. அப். 16:5

**5. தினம் தினம் வேத ஆராய்ச்சி**

மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று **தினம் தினம்** வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் அப்.17:11

**6. தினம் தினம் ஆத்தும ஆதாயம்**

(பவுல்)ஜெப ஆலயத்தில் யூதரோடும் பக்தியுள்ளவர்களோடும் சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் **தினம்தோறும்** சம்பாஷனை பண்ணினான். அப். 17:17

(பவுல்)திறன்னு என்னும் ஒருவனுடைய வித்யாசாலையிலே **அனுதினம்** சம்பாஷித்துக்கொண்டு வந்தான். அப். 19:19

**7. தினம் தினம் ஆத்தும பாரம்**

எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற வேலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. 2கொரி. 11:28

ஒழுங்கற்று நடக்கும் மனுஷனால் ஜெபிக்க இயலாது. ஜெபிக்கும் மனுஷனால் ஒழுங்கற்று நடக்க இயலாது. வீண் அலுவல்காரன் ஜெபிக்கமாட்டான்.ஜெபிப்பவனோ வீண் அலுவல்காரனாயிருக்கமாட்டான்.வீண்பேச்சு ஜெபம் அற்ற இருதயத்தில் பிறக்கும் வெத்து வேட்டு.ஜெபிக்கும் இருதயம் கிருபை நிறைந்த சாரமுள்ள உப்பைப் போன்ற ஒளி மிகுந்த வார்த்தைகளுமாய் தொனிக்கும்.ஆகையினால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் சகலமும் நல்ஒழுக்கமாயும் கிரமமாயும் செய்யப் படக்கடவது (1கொரி.14:40)என்று ஆலோசனை கூறினார்.

இப்படிப்பட்ட ஆதி அப்போஸ்தலர்களின், ஆதி திருச்சபை விசுவாசிகளின் ஜெப வாழ்வினால் அனுதின வாழ்வின் ஒழுங்கினால் தேவனுடைய கிரியை பலமாய் விளங்கிற்று .தேவனுடைய கிரியை பலமாய் விளங்கின வழிகளைப் பாருங்கள். முதாலவது தேவவசனத்தின் வளர்ச்சி சிறந்திருந்தது. **எழுப்புதலைக் கொண்டு வருவது நம் ஜெபம். எழுப்புதலை வளரச் செய்வது தேவவசனம்,** தேவ வசனத்தில் ஊன்றக் கட்டப்படாத எந்த எழுப்புதலும் நிலைநிற்க மாட்டது.

***ஆதி அப்போஸ்தல நாட்களில் தேவ வசனம்***

1. அப்.6:7 தேவவசனம் விருத்தியடைந்தது.
2. அப்.12:24 தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.
3. அப்.13:49 கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.
4. அப்.19:20 இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற் கொண்டது.

***வசனத்தின் வளர்ச்சி மனந்திரும்புதலின் வேகத்தை அதிகரிக்கச் செய்யும்***
***மனந்திரும்புருதலின் வேகம்***

## கூட்டல் விதி

1. அப்.2:41 அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் **சேர்த்துக்** கொள்ளப்பட்டார்கள்

2. அப். 4:4 வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்து, அப் 5:14 திரளான புருஷர்களும் ஸ்திரிகளும் விசுவாசமுள்ளவர்களாக், கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

### பெருக்கல் விதி

1. அப்.6:7 சீஷருடைய தொகை எருசலேமில் **மிகவும்** பெருகிற்று.
2. அப். 9:31 யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் பெருகின. மேலே உள்ள வசனங்களில் மனந்திரும்புதலின் வேகத்தைக் கவனியுங்கள். **சேர்க்கப்பட்டார்கள்**. என்கிற வார்த்தை அப்.6:7ல் **பெருகிற்று** என மாறுகிறது. அப். 2:41,4:4 வசனங்களில் உள்ள ஏறக்குறைய என்ற வார்த்தை உறுதியில்லாத நிலையற்ற குறையகூடிய எண்ணிக்கையை காட்டிற்று .ஆனால் ,அப்.5:14ல் உள்ள **அதிகமதிகமாய்** என்ற வார்த்தை உறுதியையும்,குறையாத வளர்ச்சியையும் காட்டுகிறது ,அப்.6 :7ல் உள்ள **மிகவும்** என்ற வார்த்தை மனந்திரும்புதலின் தடுக்கமுடியாத வேகத்தை, அணை போட முடியாத வெள்ளம் போன்ற தன்மையைக் காட்டுகிறது.

நாம் ஜெபிப்போமானால், உண்மையாய் ஜெபிப்போமானல் தேவன் நம் தேசத்தை மாத்திரல்ல முழு உலகத்தையும் மனந்திரும்புதல் என்னும் அக்கினியால் அசைப்பார். இரட்சிப்பு என்னும் வெள்ளம் பூமியின் விசாலத்தை மூடும். இதில் சந்தேகமேது!

இந்தத் திரள் திரளான மக்கள் மனந்திரும்பியது ஒரு பக்கம் தொடர் சம்பவாய் இருக்க சில தனிப்பட்ட மனந்திரும்புதலின் அற்புதங்களைப் பாருங்கள்.

**1. எதிரணியில் மாற்றம்**

கர்த்தரின் சீஷரை பயமுறுத்தி, கொலை செய்ய சீறி நின்ற சவுல் ஸ்தேவானைக் கொலை செய்ய சம்மதித்திருந்த சவுல் மனந்திரும்பினான். அப்9ம் அதி.

**2. அதிகாரிகள் அசைந்தனர்**

இத்தாலியா தேசத்து பட்டாளத்து நூற்றுக்கதிபதி குடும்பமாய் மனந்திரும்பினான். அப்.10ம் அதி

**3. மந்திரிகள் மனம் மாறினர்**

எத்தியோப்பிய ராஜ்யத்தின் மந்திரி மனம்திரும்பினான். அப். 8ம் அதி.

**4. ஞானிகளுக்கு இரட்சிப்பு**

விவேமுள்ள மனுஷனும், அதிபதியுமான செரிகியுபவுல் மனந்திரும்பினான். அப்.13

**5. முதலாளிகளுக்கு மீட்பு**

இரத்தாம்பரம் விற்கும் பெரிய வியாபார பெண்மணி லீதியாள் வீட்டாரோடு மனந்திரும்பினாள். அப்.16ம. அதி.

**6. சிறைக்கதவினால் பூட்ட முடியாத சுவிசேஷம்**

சிறையில் அடைத்து பவுல் சீலாவை காவல் காத்த சிறைசாலைக் காரன் வீட்டாரோடு மனந்திரும்பினான். அப்.16ம் அதி.

**7. நீதிபதிகளுக்கு மீட்பு**

உயிர்தெழுதல் செய்தி கேட்டு மார்ஸ்மேடை நியாயதிபதி மனந்திரும்பினான். அப்.17:34.

**8. மதவாதிகள் மனம் திரும்பினார்**

மேலும்,மனந்திரும்புதலின் வல்லமை எதிர்த்து நின்ற இயேசுவை கொலை செய்ய தூண்டிவிட்ட ஆசாரியர்களையும் பற்றிப்பிடித்து.அவர்களில் அனேகரும் விசு வாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள். அப். 6:7.



எழுப்புதல் என்ற சமுத்திரத்தில் எழுந்த மனந்திரும்புதல் என்ற அலைகள் எந்த கனவான்களையும,பெலவான்களையும்,சமுதாயத்தின் தூண்களையும் ஏன் சமூக விரோதிகளையுங்கூட விட்டுவைக்கவில்லை. மதவாதிகளையும் சேர்த்து வாரிக் கொண்டது. அந்த மனந்திரும்புதல் எனும் பேரலை. சுனாமி மனந்திரும்புதலின் வல்லமையின் நிறைவின் மத்தியில் அற்புதங்களும்,அடையாளங்களும் அப்போஸ்தலர்கள் கையினால் செய்யப்பட்டன.வியாதியஸ்தர் சொஸ்தாமாயினர்;முடவர் துள்ளி எழுந்தனர்:மரித்தோர் உயிர் பெற்றனர். அற்புதங்கள இன்னும் அநேகம்.

அப்.19:11 பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.

அப்.6:8 ஸ்தேவன் விசுவாசதினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும்,அடையாளங்களையும் செய்தான்.

அப்.8:13 பிலிப்புவினால் நடந்த அடையாளங்களையும்,பெரிய அற்புதங்களையும் கண்டு (சீமோன்)பிரமித்தான்.

அப்.5:15,16 பேதுரு நிழல் படடவர்கள் எல்லோரும் குணமாக்கப்பட்டார்கள்.

அப்.19:12 பவுலுடைய உறுமால்களும், கச்சைகளும்,கொண்டு வந்து போடப்பட்ட போது அற்புதங்கள் நிகழ்ந்தது.

இப்படிப்பட்ட,பெரிய விசேஷித்த அற்புதங்களோடு தேவன் நிறுத்திவிடவில்லை.ஆதித் திருச்சபையில் தேவன் எழுப்புதலின் தடைக்கற்களையும் ,எழுப்புதலுக்கு விரோதமான பிசாசின் அக்கினி ஆஸ்திரங்களையும் தகர்த்தார், முறித்தார். அதற்கு, சான்றுகள் அப்போஸ்தலர் நடபடிகளில் உண்டு. அவைகளை தேவாதிதேவன், கர்த்தாதிகர்த்தர், இராஜாதி ராஜவாகிய நமது இரட்சகர் பூமியின் தேவர்களை, பூமியின் இராஜக்களை, பூமியின் அதிகாரிகளை ஜெயித்து, அவர்களை பணியவைத்ததால் அந்த 7 அற்புதங்களை “அற்புதங்கள்”என்று சொல்லாமல் “அற்புத அற்பதங்கள்” (Miracle of Miracles) என்றழைக்கிறோம்.

### அற்புத அற்புதங்கள் : (Miracle of Miracles)

1. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லத் துணிந்த அனனியா சப்பிராள் “உடனடிமரணம்”என்ற அற்புதம் அதன் பலன் திரளமான புருஷரும் ஸ்திரீகளும் கர்த்தரண்டை அதிகமதிகமாக சேர்க்கப்பட்டார்கள். அப்.5ம் அதி
2. பணத்தினால் தேவவரத்தைச் சம்பாதிக்க நினைத்த சீமோனை உன் பணம் உன்னோடேக் கூட நாசமாய்ப் போக்கடவது என அப்போஸ்தலன் கடிந்து கொண்ட தைரியம் அதன் பலன் வரம் பணத்தினால் சம்பாதிக்கப்படவடுவதால் பரிசுத்தத் தினால், எனக் தேவ வசனம் சாட்சியாய் நிலை நிறுத்தப்பட்டது. அப்.8:20-25.
3. தேவனுக் மகிமையை செலுத்தாத ஏரோதை கர்த்தர் அடிக்க புழுபுழுத்து செத்தது அற்புதமே.அதன்பலன் தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.அப..12:22-24 .
4. கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் துணிந்த எலிமா குருடனகியது அற்புதம் அதன்பலன் அதிபதி செர்கியு பவுல் கர்த்தருடைய உபதேசத்தை விசுவாசித்தான்.அப்.13:8-12.
5. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை சொல்லத்துணிந்த சுய மகிமை விரும்பிகளான,மந்திரவாதிகளான யூதர்கள் பொல்லாத ஆவிகளால் மேற்கொள்ளப்பட்ட அற்புதம் அதன் பலன் கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.அப்.19:13-17.
6. மாயவித்தைக்காராகளின் மாயவித்தைகள் மேற்கொள்ளப்பட்டு 50,000 வெள்ளிக் காசு மதிப்புடைய மாயவித்தை புத்தங்கள் எரிக்கப்பட்ட அற்புதம் அதன்பலன் பலமாய் காத்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.அப்.19:19,20.

7. குறி சொல்லுகிற ஆவி இந்த மனிதர் தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று கூறியும் அதனை அடையாளம் கண்டு கடிந்து அப்புறப்படுத்தப்பட்ட அற்புதம் அதன்பலன் குறிசொல்லுதலால் உண்டான ஆதாயம் போயிற்று.அப்.16:1618.

நாம் இதுவரைத் தியானித்தவைகள் நம்முடைய ஆவியை மகிழச் செய்கிறதல்லவா. இவைகளெல்லாம் முன்மாரிக்காலத்துத் தேவனுடைய கிரியைகள். தேவன் நம்மை வேண்டிக் கொள்ளச் செய்வதோ பின்மாரிக் காலத்து மழைக்காக!அந்த ஜெபத்தின் பொருள் நாம் ஆதி அப்போஸ்தலர்காலத்தின் கிரியைகளை எதிர்பார்ப்பதல்ல: அவைகளிலும் மேன்மையானவைகளேயாகும்.ஆதி அப்போஸ்தலர் கண்ட அற்புதங்ளையும் நாம் காணவேண்டும் அவைகளை மாத்திரமல்ல அவைகளிலும் பெரியவைகளையும் நாம் காணவேண்டும்.காரணம் ஆதி அப்போஸ்தலக் காலத்து திராட்சை ரசம் ருசி குறைந்த முந்தின திராட்சை ரசம்.

**நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய பின் மாரியோ பிந்தின ஆலயத்தின் பெரிய மகிமை. நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய பின் மாரியோ பிந்தின ,ருசி மிகுந்த திராட்சை ரசம். அது நிச்சயம் அப்போஸ்தலக் காலத்து மகிமையைக் காட்டிலும் பெரிதானவைகளாகத்தான் இருக்கும். அப்போஸ்தலர் காலத்துக் கிரியைகளைக் காட்டிலும் பெரிதானவைகளாகத்தான் இருக்க வேண்டும்.**

எழுதியிருக்கிறபடி தேவன்: தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயுத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை ,காது கேட்கவுமில்லை.அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.(1 கொரி.2:9)அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் காணும் கிரியைகள் இன்றைய நிலையில் கண்ணால் கண்டவைகள்,காதால் நாம் கேட்காதவைள் .அதன் மகிமையைச் சற்று ஆராய்ந்து பாருங்கள் .அவைகளைத் தேவ ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்துவார்.(1 கொரி 2:10)ஆவியானவரோடு ஒத்திசையுங்கள்.முந்தின ரசத்தில் பேதுருவின் நிழலுக்கு வல்லமையானால் ,பிந்தின ருசி மிகுந்த ரசத்தில் நம்முடைய கண்களின் பார்வைக்கு வல்லமையிருக்க வேண்டுமே.முன்மாரிக் காலத்தில் பவுலின் உருமால்களிலும் கச்சையிலும் வல்லமை வெளிப்பட்டதானால்' பின்மாரிகாலமான நம்முடைய நடையிலும்,அசைவிலும் வல்லமை வெளிப்பட வேண்டுடமே.முந்தின ஆலயத்தின் மகிமையில் விசேஷித்த அற்புதங்களும் ,பெரிய அற்புதங்களும் நிகழ்ந்ததானால் பிந்தின ஆலயத்தின் பெரிய மகிமையில் மகா பெரிய அற்புதங்களும்,மகா விசேஷித்த அற்புதங்களும் நிகழ வேண்டுமே.அவைகள் எங்கே?என நம்முடைய உள்ளம் ஏங்கட்டும் .முழங்கால்கள் முடங்கட்டும்.கண்கள் கண்ணீர் சிந்தட்டும்.

அப்பொழுது தேசங்கள்,தீவுகள்,பல பிராந்தியங்கள் பின் மாரி மழையால் நனைந்து மாற்றம் பெறும். பாதாளத்தின் வாசல்கள் அடைபடும் : பரலோகத்தின் வாசல் திறக்கப்படும் இப்பூவுலக மாந்தர்க்கு! நகரம் வெறுமையாகும்: பரலோகம் சகல ஜாதிகளால் நிரம்பித் ததும்பும்!சாத்தானின் கோட்டைகள் தரைமட்டமாகும்.

**தேவனுடைய ராஜ்யம் பெயர்க்கப்படாத கல்லாய் பூமியின் விசாலத்தை மூடும்**

ஆமான்கள் வீழ்வர் .பார்வோன்கள் செங்கடலில் மடிவர். நெபுகாத் நேச்சார்கள் மாட்டைப்போல் புல்லைத் தின்பர்.எஸ்தர்கள் ஆளுவார்கள் .மொர்தேகாய்கள் உயர்வார்கள் .தானியேல்கள் நீங்காது நிலைத்திருப்பார்கள் . மோசேக்கள் பார்வேனின் தேவனாய் (யாத்.7:11)மாறுவார்கள். இந்தப் பின் மாரியின் அற்புதத்தைக் காண வாஞ்சிப்போமா.ஜெபிப்போம் வாருங்கள் .பின்மாரியை காணும்மட்டும்!



# உலக நாடுகளுக்காய் ஜெபியுங்கள்

**ஆகஸ்ட் 1 வெள்ளி** **சவுதி அரேபியா**

முஸ்லீம்களின் புனித நகரமான மெக்கா இங்கே உள்ளது. தலைநகர் ரியாத் ஆகும். இங்கு சுவிசேஷம் பிரசங்கிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பாக இங்கே கிறிஸ்தவர்கள் ஏராளமாய் இருந்தனர். சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு முஸ்லீம்களின் ஆளுகைக்கு வந்தபோது கிறிஸ்தவர்கள் அனைவரும் இங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இங்கிருந்து உலகை முஸ்லீம் மயமாக்கும் முஸ்லீம் மிஷனெரி பணி தலைமை ஏற்று செயல்படுத்தப்படுகிறது. உலக நாடுகளுக்கு முஸ்லீம் மிஷனெரிகளை அனுப்புதல், உலக நாடுகளில் மசூதிகளை கட்டுதல், முஸ்லீம் மிஷனெரிப் பணிக்கான இலக்கியங்களை வெளியிடுதல், வானொலி, தொலைகாட்சி மூலம் முஸ்லீம் பணியை விரிவுப்படுத்துதல் இவற்றிற்கு இந்த நாட்டிலிருந்து பண உதவி செய்யப்படுகிறது. ஒரு சவுதி அரேபியன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள் இது ஒரு மத்திய கிழக்கு நாடாகும்.

**ஆகஸ்ட் 2 சனி** **அல்ஜீரியா**

இது எண்ணைவளம் மிகுந்த ஒரு நாடு இங்கு 99.47% முஸ்லீம்கள் உள்ளனர். தலைநகர் அல்ஜீயர்ஸ் ஆகும். இங்கு புராட்டஸ்டண்டு மற்றும் கத்தோலிக்க சபைகள் மட்டும் இந்நாட்டினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முஸ்லீம் மக்களால் கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டு. இங்கு கிறிஸ்தவ பெண்கள் முஸ்லீம்களை திருமணம் செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இந்த நாட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்க மிகுந்த தடை காணப்படுகிறது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள் இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும்.

**ஆகஸ்ட் 3 ஞாயிறு** **மோராக்கோ**

7வது நூற்றாண்டில் அரேபியா இராணுவம் இந்த நாட்டை கைப்பற்றியபோது இஸ்லாம் நாடாக மாற்றப்பட்டது. தலைநகர் இராபாத் ஆகும். கிறிஸ்தவம் தடை செய்யப்பட்டு கிறிஸ்தவ ஆலயங்கள் நாட்டை விட்டு நீக்கப்பட்டன. 80%க்கு மேற்பட்ட மக்களுக்கு கிறிஸ்தவத்தை குறித்து ஒன்றும் தெரியாது. இங்கு இருக்கும் ஒரு சில சபைகள் மிகுந்த உபத்திரவத்தின் பாதையில் கடந்து செல்கின்றன. இந்த நாட்டிற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள் இது ஒரு மத்திய கிழக்கு நாடாகும்

**ஆகஸ்ட் 4 திங்கள்** **லிபியா**

இங்கு சுவிசேஷத்திற்கு 1960ம் ஆண்டு தடைவிதிக்கப்பட்டது. லிபியாவின் தலைநகர் திரிபோலி ஆகும். இந்த நாட்டின் அரசாங்க மொழி அரபிக். மேலும் 11 மொழிகள் இங்கு பேசப்படுகிறது. லிபியாவிற்கு சுவிசேஷத்திற்கு முக்கியமான வழியாக வானொலியும், தொலைக்காட்சியுமாக இருக்கிறது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள். லிபியா மத்திய கிழக்கு ஆசியா நாடாகும்.

**ஆகஸ்ட் 5 செவ்வாய்** **ராக்**

இங்கு இருந்த அரசர் ஆட்சி 1958ம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியினால் தூக்கி எறியப்பட்டது. தலைநகர் பாக்தாத் ஆகும். இங்கு 19 மொழிகள் பேசப்படுகின்றன. அரபிக் குர்தீஸ் இரண்டும் அரசாங்க மொழிகளாகும். 1968ம் ஆண்டு இங்கு கிறிஸ்தவர்கள்

ஆராதிக்க அனுமதியைப் பெற்றாலும் கிறிஸ்தவர்களுக்குள்ள உபத்திரவம் இந்த நாட்டில் தொடர்கிறது. இங்கு முஸ்லீம்கள் 95.4% உள்ளனர். இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 6 புதன் லெபனான்**

இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். தலைநகர் பெய்ரூட் ஆகும். 1941ம் ஆண்டு இது குடியரசு நாடாக மாற்றப்பட்டது. இங்கு 53 சதவிதத்தினர் முஸ்லீம் மக்கள். 38.7 சதவீதத்தினர் கிறிஸ்தவர்கள். முன் நாட்களில் லெபனான் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுவிசேஷத்தை சுமந்து செல்வதற்கு முக்கியமான மையமாக இருந்தது. தற்போது இப்பணி இந்நாட்டில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இங்கிருந்து கிறிஸ்தவ இலக்கியங்கள் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டு வந்தன. அது தற்போது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்

**ஆகஸ்ட் 7 வியாழன் சீரியா**

இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். தலைநகர் தமஸ்கு ஆகும். அரசாங்க மொழி அரபி. மேலும் 11 மொழி பேசப்படுகிறது. இது 1973ம் ஆண்டு வரை முஸ்லீம் நாடாக அறிவிக்கப்பட்டிருந்தது. 1973ல் இது மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. இங்கு முஸ்லீம் 90.5 சதவீதம். கிறிஸ்தவர்கள் 8 சதவீதம். இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 8 வெள்ளி ஈரான்**

இங்கு பார்சி மொழி பேசப்படுகிறது. தலைநகர் **டெக்ஃரான்** ஆகும். இதற்கு மேல் 50 மொழிகள் உள்ளன. இது முஸ்லீம் குடியரசு நாடு என்று 1979ம் ஆண்டு அறிவிக்கப்ட்டது. இங்கு 99% மக்கள் முஸ்லீம்கள். இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். 1988க்கு இங்கு கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் மிகுதியானது. 66,438 கிராமங்கள் உள்ளன. அதில் 10க்கு கீழ்ப்பட்ட கிராமங்களில் தான் சில கிறிஸ்தவர்கள் உண்டு. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 9 சனி இஸ்ரயேல்**

இது 1948ம் ஆண்டு நிறுவப்பட்ட தேசம் இங்கு எல்லா மதத்தினருக்கும் மத சுதந்தரம் கொடுக்கப்பட்டுள்ளது. தலைநர் டெல்அலிவ் ஆகும். ஆனால் யூத கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அது மறுக்கப்பட்டுள்ளது. இங்கு **யூதா** மதத்தினர் 81.4% முஸ்லீம்கள் 14.5% கிறிஸ்தவர்கள் 2.3,4% உள்ளனர். இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 10 ஞாயிறு உஸ்பெக்கீஸ்தான்**

இது ஒரு யுரேசியா கண்டத்தில் அமைந்த ஒரு சுதந்திர மார்க்கிஸ்ட் கம்யூனிச நாடாக இருந்தது. தலைநர் தாஸ்கெண்ட் ஆகும். இது ஒரு மதசார்பற்ற நாடாக இருந்தாலும் இஸ்லாமியத்தின் ஆதிக்கம் இங்கு அதிகமாக உள்ளது. 1991ல் இது ஒரு சுதந்திர குடியரசாக மாறியது. இங்கு முஸ்லீம் 68.27% இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 11 திங்கள் வங்காள தேசம்**

இது ஒரு ஆசிய நாடாகும். தலைநர் டாக்கா ஆகும். இந்திய தேசத்தின் அண்டை நாடாகும். 1971 முதல் 1988 வரை இந்நாடு ஒரு மதசார்பற்ற நாடாய் இருந்தது. 1988ல் முஸ்லீம் மதம் இந்த நாட்டின் மதமாக அறிவிக்கப்பட்டு, இந்நாடு பாகிஸ்தானிலிருந்து பிரிந்து 1971ல் உருவானது. இந்நாட்டில் கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டு. இங்கு உபத்திரவங்களின் மத்தியில் சுவிசேஷப்பணியும், சபையும் வளர்ந்தும் நடந்தும்



வருகிறது. இங்கு முஸ்லீம் 87%. கிறிஸ்தவர்கள் 0.44% உள்ளனர். இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 12 செவ்வாய் பூட்டான்**

இது ஒரு ஆசிய நாடாகும். தலைநகர் திம்பூ ஆகும். இந்திய தேசத்தின் அண்டை நாடாகும். இது ஒரு புத்த மதத்தை தேசிய மதமாக கொண்ட சுதந்திர நாடாகும். இங்கு புத்த மத்தினர் 70.1% இந்துக்கள் 24%, முஸ்லீம் 5% கிறிஸ்தவர்கள் 0.33% இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 13 புதன் துருக்கி**

இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். தலைநகர் அங்காரா ஆகும். 1920ல் துருக்கி ஒரு மதசார்பற்ற நாடாக இருந்தாலும் இப்போது முஸ்லீம் ஆதிக்கம் மிகுந்த நாடாக உள்ளது. இங்கு முஸ்லீம் 99.8% உள்ளனர். முன் ஒரு காலத்தில் கிறிஸ்தவத்தின் கோட்டையாய் இருந்த இந்நாடு இப்போது முஸ்லீம் பிரச்சார கோட்டையாக உள்ளது. (வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட 7 சபைகளும் பழைய துருக்கியில் தான் இருந்தது) பவுல், லூக்கா ஆகியோர் பிறந்தது துருக்கியில்தான் தற்போது கிறிஸ்தவர்கள் 0.2% உள்ளனர் இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 14 வியாழன் இந்தோனேசியா**

இது ஒரு ஆசிய நாடாகும். தலைநகர் ஜகார்த்தா ஆகும். இங்கு முஸ்லீம்கள் 87% உள்ளனர். கிறிஸ்தவர்கள் 9.6% உள்ளனர். இங்கு 76 ஆயிரம் கிராமங்கள் உள்ளன. அதில் 50 ஆயிரம் கிராமங்களில் சபைகள் இல்லை என புள்ளி விபரம் கூறுகிறது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 15 வெள்ளி லாவோஸ்**

இது ஒரு ஆசிய நாடாகும். தலைநகர் வியண்டியானே ஆகும். இங்கு கிறிஸ்தவர்களுக்கு கம்யூனிஸ்டுகளால் 1975 முதல் 1978 வரை மிகுந்த உபத்திரவம் இருந்தது. இங்கு புத்த மதத்தினர் 58.7 சதவீதம். உயிர் வணக்கத்தினர் 33 சதவீதம், கிறிஸ்தவர் 1.5 சதவீதம், முஸ்லீம்கள் 1 சதவீதம் உள்ளனர். இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 16 சனி மாலத்தீவுகள்**

இது ஒரு ஆசிய நாடாகும். தலைநகர் மலே ஆகும். இங்கு முஸ்லீம்கள் 99.4 சதவீதம் கிறிஸ்தவர்கள் 0.1 சதவீதம். இங்கு முஸ்லீம் மதம் மட்டுமே அரசாங்கத்தால் ஏற்றுக்கொண்ட மதமாகும். இங்கு கிறிஸ்தவ கூட்டங்கள் நடத்த தடை செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்தவ இலக்கியங்கள், கிறிஸ்தவ வானொலி, தொலைக்காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் தடை செய்யப்பட்டுள்ளது.

**ஆகஸ்ட் 17 ஞாயிறு வியட்நாம்**

இது ஒரு ஆசிய நாடு ஆகும். தலைநகர் ஹனோய் ஆகும். சட்டப்படி இங்கு மதசுதந்தரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது அர்த்தமற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் மேல் அரசாங்கத்தினால் தூண்டப்படும் வன்முறைகள் ஏராளம். இங்கு புத்த மதத்தினர் 52 சதவீதம். எந்த மதத்தையும் சாராதோர் 29.8 சதவீதம். கிறிஸ்தவர்கள் 9.8 சதவீதம். முஸ்லீம்கள் 0.27 சதவீதம் இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 18 திங்கள் சூடான்**

இது ஒரு மத்திய கிழக்கு ஆசிய நாடாகும். தலைநகர் கார்தோம் ஆகும். 1983ல்

இது முஸ்லீம் குடியரசாக அறிவிக்கப்பட்டது. இங்கு முஸ்லீம்கள் 70 சதவீதம். கிறிஸ்தவர்கள் 19 சதவீதம். 50 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் தொடர்ந்து இருந்து வருகிறது. 1985ல் இருந்து இதன் அளவு மிகவும் அதிகமாய் உள்ளது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 19 செவ்வாய் ஸ்ரீலங்கா**

இது ஒரு ஆசிய நாடு. தலைநகர் கொழும்பு ஆகும். இது இந்தியாவின் அண்டை நாடாகும். புத்த மதம் இந்நாட்டின் அரசாங்க மதமாகும். புத்தமதத்தினர் 70.3 சதவீதம். இந்துக்கள் 14.3 சதவீதம். முஸ்லீம் 7.8 சதவீதம். கிறிஸ்தவர்கள் 7.6 சதவீதம் உள்ளனர். இங்கிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு புத்தமதத்தை பரப்பும் பணி நடைபெற்று வருகிறது. கிறிஸ்தவ மிஷனெரி பணி அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. இங்கு 25,483 கிராமங்கள் உள்ளன இதல் சுமார் 1000 கிராமங்களில் மட்டுமே சபைகள் உள்ளது. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 20 புதன் எத்தியோப்பியா**

இது ஒரு ஆப்பரிக்க நாடாகும். தலைநகர் அடிஸ் அபாபா ஆகும். எத்தியோப்பியா இக்கண்டத்தின் முதல் கிறிஸ்தவ நாடாக 4வது நூற்றாண்டிலிருந்து இருந்தது. 1974ல் ஏற்பட்ட கம்யூனிச புரட்சியினால் கிறிஸ்தவ சபைகள் துன்புறுத்தப்படடன. 1991ல் மார்க்கிஸ்ட் ஆட்சி ஏற்பட்டது. இங்கு கிறிஸ்தவர்கள் 58 சதவீதம் முஸ்லீம் 35 சதவீதம். எத்தியோப்பியா ஒரு பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நாடாகும். இங்கு சபையானது கம்யூனிசத்தினால் மிகவும் நெருக்கப்படுகிறது. கம்யூனிச உதவியுடன் முஸ்லீம்கள் கிறிஸ்தவத்திற்கு விரோதமாய் செயலாற்றுகின்றனர். கிறிஸ்தவ சபைகள் மூடப்படுகின்றன. இந்த நாட்டிற்காக ஜெபியுங்கள்.

**ஆகஸ்ட் 21 வியாழன் சீனா**

இது ஒரு ஆசிய நாடாகும். தலைநகர் பெய்ஜீங் ஆகும். உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகும். இது ஒரு சுதந்திர குடியரசு என்று தங்களை அழைத்துக் கொண்டது. கம்யூனிசத்தின் ஆதிக்கம் மிகுந்த நாடாகும். கம்யூனிச மக்கள் தங்களை எந்த மதமும் இல்லாதவர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் 59.1%, சீன மதத்தினர் 27%, புத்த மதத்தினர் 3%, முஸ்லீம் 2.4% கிறிஸ்தவர்கள் 6.1% தேசம் தழுவிய உபத்திரவம் இங்கு கிறிஸ்தவர்களுக்கு உண்டு. இந்த நாட்டிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**ஆகஸ்ட் 22 வெள்ளி எகிப்து**

